**வரையறுக்கப்பட்ட காணி மறுசீரமைப்பு மற்றும் அபிவிருத்தி கம்பனி - 2016**

---

வரையறுக்கப்பட்ட காணி மறுசீரமைப்பு மற்றும் அபிவிருத்தி கம்பனியின் (''கம்பனி'') 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன.

இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரைக்கமைய இந்த அறிக்கை வழங்கப்பட்டது.

## 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை சிறிய மற்றும் நடுத்தரளவு நிறுவனங்களிற்கான (எஸ்எம்ஈஎஸ் இற்கான எஸ்எல்எவ்ஆர்எஸ்) இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென சபை நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு பணிப்பாளர் சபை (''சபை'') பொறுப்பாக உள்ளது.

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் நடாத்தப்பட்ட கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இந்த அறிக்கையின் மறுப்பு அபிப்பிராயத்திற்கான பந்தியின் அடிப்படையில் விபரிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்துவம் காரணமாக, எவ்வாறாயினும், கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையொன்றினை வழங்குவதற்கு போதுமானதும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளேன்.

## 1.4 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

(அ) வரையறுக்கப்பட்ட எல்ஆர்டீசீ சேவைகள் (தனியார்) கம்பனியில் கம்பனி 100 சதவீத உரிமைத்துவத்தினைக் கொண்டிருந்தது. இலங்கை கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம், தாய்க் கம்பனி வருடாந்தம் ஒன்றிணைந்த நிதிக் கூற்றுக்களினை தயாரிக்க வேண்டுமென வேண்டப்படுகின்றது. எவ்வாறாயினும், கணக்காய்வு நோக்கத்திற்கு கம்பனி ஒன்றிணைந்த நிதிக் கூற்றுக்களினை வழங்கியிருக்கவில்லை.

(ஆ) 2016 திசெம்பர் 31 இல் உள்ளபடியான நிர்மாண நடைமுறை வேலைகள் தொடர்பில் ரூபா 53,050,416 தொகையொன்றினை கம்பனி பதிந்திருந்தது. ஆவணரீதியான பற்றாக்குறையின் காரணமாக, மீதிகளின் உள்ளதன்மை, முழுமைத்தன்மை மற்றும் துல்லியத்தன்மையினை மெய்மையாய்வு செய்வதற்கு திருப்திகரமான ஆவணங்கள் கிடைக்கக்கூடியதாக மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(இ) கம்பனியின் தொழிற்சாலை வளாகத்திற்கான களப்பரிசோதனையின் போது, உருவாக்கப்பட்ட வெளியீட்டில் குறைபாடுகள் காரணமாக கம்பனியின் உற்பத்திக்கு பயன்படுத்தப்படாதிருந்த ஒரு இயந்திரம் அவதானிக்கப்பட்டது. இந்த இயந்திரம் 2014 இல் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் 2016 திசெம்பர் 31 இல் உள்ளபடியாக ரூபா 3,155,600 ஆன தேறிய புத்தகப் பெறுமதியொன்றினைக் கொண்டிருந்தது. எவ்வாறாயினும், குறித்த சொத்தின் மீளஅறவிடப்படக்கூடிய பெறுமதி கம்பனியால் இன்னமும் கண்டறியப்பட்டிருக்காததுடன் இது தொடர்பில் நட்டக்கழிவு மதிப்பீடொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஈ) பொதுப்பேரேடு மற்றும் வாடிக்கையாளர்களினால் வழங்கப்பட்ட ஆதரவான பட்டியல்களுக்கிடையே காட்டப்பட்ட ஊழியர் கடன்கள், விழா முற்பணங்கள் மற்றும் ஏனைய கடன் மீதிகளுக்கிடையே இனங்காணப்படாத வித்தியாசங்கள் என்னால் அவதானிக்கப்பட்டதுடன் அவை பின்வருமாறு;

| கணக்கின் பெயர் | பொதுப்பேரேட்டின் பிரகாரம் மீதி | பட்டியலின் பிரகாரம் மீதி | வித்தியாசம் |
|---|---|---|---|
| | ரூபா. | ரூபா. | ரூபா. |
| உத்தியோகத்தர் கடன் | 3,498,952 | 3,711,597 | (212,645) |
| விழா முற்பணம் | 267,121 | 202,000 | 65,121 |
| விசேட கடன் | 2,941,063 | 2,447,164 | 493,899 |
| ஏனைய கடன்கள் | 559,814 | - | 559,814 |

மேற்குறிப்பிடப்பட்ட வித்தியாசங்களினை இணங்கச் செய்வதற்கு போதிய சான்றுகளை எனக்கு வழங்குவதற்கு முகாமைத்துவத்தினால் முடியாததாகக் காணப்பட்டதுடன் 2016 திசெம்பர் 31 இல் உள்ளபடியான கம்பனியின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட மேற்குறித்த பெறவேண்டிய கடன்களின் உள்ளதன்மை அல்லது முழுமைத்தன்மையினை தீர்மானிப்பதற்கு என்னால் முடியாதிருந்தது.

(உ) நிதிக்கூற்றுக்களினை 2.4(அ) இலக்க கணக்கீட்டுக் கொள்கைகளில் குறிப்பிட்டதற்கிணங்க, கம்பனி அதன் ஒப்பந்த வருமானத்தினை காசு அடிப்படையில் இணம்கண்டிருந்தது. அறிக்கையிடல் காலப்பகுதியில் ஒப்பந்த செயற்பாடுகளின் பூர்த்தி மட்டத்தின் அளவினால் முறையே வருமானம் மற்றும் செலவினமாக, நிர்மாண ஒப்பந்தங்களுடன் தொடர்புடைய ஒப்பந்த வருமானம் மற்றும் ஒப்பந்த கிரயங்கள் நிறுவனத்தினால் இனங்காணப்படுவதுடன், நிர்மாண ஒப்பந்தமொன்றின் நம்பத்தகுந்த விளைவாக மதிப்பிடப்பட முடியுமென வேண்டப்படுகின்ற எஸ்எம்ஈஎஸ் இற்கான எஸ்எல்எவ்ஆர்எஸ் இன் 23.17 ஆம் பிரிவின் பிரகாரம் இது காணப்படவில்லை.

(ஊ) பெறவேண்டிய பெறுமதி சேர் வரியின் (VAT) தொகையொன்றுடன் தொடர்புடைய ஏனைய பெறவேண்டியவைகளுள் ரூபா 210,619 தொகையொன்று பிரதிபலித்திருந்தது. பல ஆண்டுகளுக்கு பின்னரிலிருந்து மீதி கீழ்க் கொண்டுவரப்பட்டிருந்தது. இந்த மீதியின் உள்ளதன்மை, முழுமைத்தன்மை மற்றும் துல்லியத்தினை மெய்மையாய்வு செய்வதற்கு திருப்திகரமான ஆவணங்கள் கிடைக்கக்கூடியதாக மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(எ) சுதந்திரமான உறுதிப்படுத்தல்கள் அல்லது ஏனைய கொடுக்கல் வாங்கல்களின் ஆதரவுகள் / துண்டாக்கங்கள் இல்லாதமையினால், அறிக்கை திகதியில் உள்ளபடியான நிதிக்கூற்றுக்களில் பிரதிபலிக்கப்பட்ட பின்வரும் மீதிகளின் துல்லியத்தன்மையினை என்னால் திருப்திபடமுடியாதுள்ளது.

| விடயம் | தொகை |
|---|---|
| | ரூபா. |
| இலங்கை காணி மறுசீரமைப்பு & அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்திற்கு செலுத்த வேண்டிய கடன்கள் | (1,200,000) |
| இலங்கை காணி மறுசீரமைப்பு & அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்திற்கு செலுத்த வேண்டிய தொகைகள் | (19,685,960) |
| வரையறுக்கப்பட்ட எல்ஆர்டீசி சேவைகள் (தனியார்) கம்பனிக்கு செலுத்த வேண்டிய தொகைகள் | (676,899) |
| இலங்கை காணி மறுசீரமைப்பு & அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்திடமிருந்து பெறவேண்டிய தொகைகள் | 13,488,123 |
| வரையறுக்கப்பட்ட எல்ஆர்டீசி சேவைகள் (தனியார்) கம்பனிக்கு செலுத்த வேண்டிய தொகைகள் | 24,002 |

(ஏ) 2016 திசெம்பர் 31 இல் உள்ளபடியான முறையே நீண்ட வருமதியாகவுள்ள பெறவேண்டிய பிடிகாசு மற்றும் பெறவேண்டிய நகர்வு முற்பணம் ரூபா 61,393,884 மற்றும் ரூபா 34,044,266 தொகையொன்றினை கம்பனி பதிந்திருந்தது.

(ஐ) பெறுமதிசேர் வரி (VAT) திரும்பல் மற்றும் பேரேட்டில் கருத்திற்கொள்ளப்பட்ட வரிவிதிப்பு விநியோகங்களுக்கிடையே வித்தியாசமொன்றினை நான் அவதானித்தேன். அதன் விளைவாக, ரூபா 9,533,358 இனால் பெறுமதி சேர் வரி குறைத்து வழங்கப்பட்டிருந்தது. மேலும், மீதிகளின் உள்ளதன்மை, பூர்த்தியான தன்மை மற்றும் துல்லியத்தன்மையினை மெய்மையாய்வு செய்வதற்கு திருப்திகரமான சான்றுகள் கிடைக்கக்கூடியதாக மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| விடயம் | தொகை |
|---|---|
| | ரூபா. |
| மொத்த வரிவிதிப்பு விநியோகம் - வருமானத்தின் படி | 358,399,142 |
| மொத்த வரிவிதிப்பு விநியோகம் - ஏட்டின் படி | 421,954,864 |
| வித்தியாசம் | 63,555,722 |
| வரித் தாக்கம் (பெறுமதிசேர் வரி வீதம் - 15 %) | 9,533,358 |

(ஒ) இலங்கை கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம், கம்பனியினால் பின்வரும் வெளிப்படுத்தல்கள் வேண்டப்படுகின்றன.

(i) விலையொன்று அறவிடப்பட்டுள்ளமை தொடர்பில் அறிக்கையிடும் நிருவகத்திற்கும் தொடர்புடைய தரப்பினருக்குமிடையில் வளங்களின் பரிமாற்றமொன்று, சேவைகள், கடப்பாடுகள் தொடர்பிலான தொடர்புடைய தரப்பினர்களுக்கிடையிலான கொடுக்கல் வாங்கல்கள்

(ii) பின்வரும் ஒவ்வொரு வகைகளிலும் நேரடியாக அல்லது மறைமுகமாக ஒரு நிறுவனத்தின் நடவடிக்கைகளை திட்டமிடல், இயக்குதல், கட்டுப்படுத்தல் தொடர்பான பொறுப்பு மற்றும் அதிகாரமுடைய முக்கிய முகாமைத்துவ நபர்களுக்கான இழப்பீடுகள் : (அ) குறுங்கால ஊழியர் நலன்கள் ; (ஆ) பிற்போடப்பட்ட ஊழியர் நலன்கள் ; (இ) ஏனைய நீண்ட கால நலன்கள் ; (ஈ) முடிவுறுத்தல் நலன்கள் ; மற்றும் (உ) பங்கு அடிப்படையிலான நலன்கள்.

(iii) நிகழலாம் என்ற சாத்தியமான பொறுப்புக்களான நிகழத்தக்க பொறுப்புக்களானது நிகழத்தக்க ஆதாயம் ஒன்றுடன் தொடர்புபட்ட சாத்தியமான சொத்துக்களான நிகழத்தக்க சொத்துக்கள் மற்றும் நிச்சயமற்ற எதிர்கால நிகழ்வு ஒன்றினது விளைவில் தங்கியுள்ளது. நிதிக்கூற்றுக்களில் அத்தகைய எந்தவொரு வெளிப்படுத்தல்களும் காணப்படவில்லை.

(ஓ) என்னுடைய முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில், ''ஏனைய விடயப் பந்தியில்'' உள்ளவாறாக, வருமானத்தோடு தொடர்புடைய நிதிக்கூற்றுக்களில் பிரதிபலிக்கின்ற மீதி, நிர்மாணிப்பு குறைவேலை, பெறுவனவுகள், வருமானவரி பெறுவனவுகள் மற்றும் தொடர்புடைய தரப்பினர் கொடுக்கல் வாங்கல்கள் என்பன தகுதி பெற்றிருந்தன. இருப்பினும், 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதிகளின் பொருத்தப்பாட்டினை நிறுவுவதில் கூடுதலான ஆதரவு எனக்கு வழங்கப்படாதிருந்ததோடு அவற்றின் உள்ளதன்மை, பூரணத்துவம் மற்றும் சரியான தன்மை என்பவற்றையும் உறுதி செய்ய முடியாமல் இருந்தது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 மறுப்பு அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் மறுப்பு அபிப்பிராயத்திற்கான பந்தியின் அடிப்படையில் விபரிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்துவம் காரணமாக, கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையொன்றினை வழங்குவதற்கு போதுமானதும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளினை நான் பெற்றுக்கொள்ள முடியாதிருந்தது. அதற்கிணங்க, இந் நிதிக்கூற்றுக்கள் மீது நான் அபிப்பிராயம் ஒன்றைத் தெரிவிக்கவில்லை.

#### 2.1.1 ஏனைய சட்டரீதியான மற்றும் பிரமாணரீதியான தேவைப்பாடுகள் மீதான அறிக்கை

2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச் சட்டத்தின் 163(2) ஆம் பிரிவின் மூலம் வேண்டப்பட்டவாறு, நான் பின்வருமாறு குறிப்பிடுகின்றேன்.

(அ) அபிப்பிராயத்திற்கான அடிப்படையும் கணக்காய்வின் நோக்கெல்லை மற்றும் வரையறைகளும் மேற்குறிப்பிட்டவாறு உள்ளன.

(ஆ) எனது அபிப்பிராயத்தில் 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச் சட்டத்தின் 151 மற்றும் 148(2) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளுடன் கம்பனியானது நிதிக்கூற்றுக்கள் இணங்கவில்லை என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 2.2 சட்டங்கள், விதிகள், பிரமாணங்ள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
| --- | --- |
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரச நிதிப்பிரமாணங்கள் | |
| நிதிப்பிரமாணம் 371 | இலங்கை வங்கி, ஹட்டன் கிளையில் பராமரிக்கப்படும் வங்கி நடைமுறைக் கணக்கொன்றிற்கு வங்கி இணக்கக்கூற்று 2017 சனவரி தொடக்கம் திசெம்பர் மாதம் வரை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 2003 யூன் 02 இன் பீஈடி/12 ஆம் இலக்க பொதுமுயற்சிகள் சுற்றறிக்கை | |
| (i) 7.4.5 ஆம் பிரிவு | கம்பனியின் நிலையான சொத்துக்களினை மெய்மையாய்வு செய்வதற்கு வருடாந்த மதிப்பாய்வுச் சபை மற்றும் விசேட மதிப்பாய்வுச் சபை நியமிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) 7.4.1 ஆம் பிரிவு | மூன்று மாதங்களுக்கு ஒரு தடவையேனும் தொடர்ச்சியான அடிப்படையில் கணக்காய்வு குழு கூட்டம் நடாத்தப்பட்டிருக்கவில்லை. |
| (இ) 2013 ஆகஸ்ட் 12 இன் 1823/05 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி | விலையிடல் கொள்கையை மாற்றுவதனை அறிமுகப்படுத்தும் நோக்குடன் முறையான விலையிடல் மாற்றுகை கற்கையினை கம்பனி நடாத்தியிருக்கவில்லை. |

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான கம்பனியின் தொழிற்பாடுகளிலிருந்தான வரிக்கு முன்னரான அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான வரிக்கு முன்னரான தேறிய இலாபம் ரூபா 51.4 மில்லியனுடன் ஒப்பிடும் போது ரூபா 5.7 மில்லியனான தேறிய இலாபத்தை விளைவித்திருந்தமையால் மீளாய்வாண்டின் போது நிதிசார் விளைவுகளில் ரூபா 45.7 மில்லியனான பற்றாக்குறையொன்றினைக் சுட்டிக்காட்டுகின்றது. ரூபா 82.4 மில்லியனால் மீளாய்வாண்டில் நிர்மாணங்கள் மற்றும் பட்டறைகளிலிருந்து வருமானம் குறைவடைந்தமை மீளாய்வாண்டிற்கான நிதிசார் விளைவுகளில் இந்தப் பற்றாக்குறைக்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தன.

### 3.2 பகுப்பாய்வு நிதிசார் மீளாய்வு

#### 3.2.1 முக்கியமான கணக்கீட்டு விகிதங்கள்

கிடைக்கக்கூடிய தகவல்களின் அடிப்படையில், கம்பனியின் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகளுக்கான சில முக்கியமான கணக்கீட்டு விகிதங்கள் கீழே தரப்படுகின்றன.

| | 2016 | 2015 |
|---|---|---|
| மொத்த இலாப எல்லை (வீதம்) | 9.49 | 15.18 |
| தேறிய இலாப எல்லை (வீதம்) | 1.36 | 10.33 |
| நடைமுறை விகிதம் (தடவைகளின் எண்ணிக்கை) | 1.37 | 1.29 |
| கடன்பட்டோர் புரள்வு விகிதம் (தடவைகளின் எண்ணிக்கை) | 9 | 10 |
| கடன் சேகரிப்பு காலம் (நாட்களில்) | 40 | 33 |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

(அ) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது நிர்மாண வருமானங்களும் கம்பனியின் ஏனைய செயற்பாட்டு வருமானங்களும் முறையே ரூபா 82.4 மில்லியன் மற்றும் ரூபா 5.6 மில்லியனால் அல்லது 19 வீதம் மற்றும் 53 வீதத்தால் குறைவடைந்ததன் காரணமாக கம்பனியின் மொத்த இலாப எல்லையானது 2015 இல் 15.18 வீதத்திலிருந்து 2016 இல் 9.49 வீதமாக வீழ்ச்சியடைந்திருந்தது. இதன் விளைவாக, மீளாய்வாண்டில் மொத்த இலாப எல்லையானது குறிப்பிடத்தக்களவு குறைவடைந்து காணப்பட்டது.

(ஆ) கடன்பட்டோர் புரள்வு விகிதம் மற்றும் கடன் சேகரிப்புக் காலம் என்பன மிக பலவீனமான மட்டத்தில் காணப்பட்டமையால் கம்பனியின் கடன் முகாமைத்துவ செயன்முறையில் ஒரு திருப்தியற்ற நிலையினை சுட்டிக்காட்டியது.

### 4. செயற்பாட்டு மீளாய்வு

#### 4.1 செயலாற்றல்

கம்பனியின் அமைப்பு அகவிதிக்கு அமைய, கம்பனியின் பிரதான குறிக்கோள்களும், பிரதான தொழிற்பாடுகளும் பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றது.

(அ) நகர அபிவிருத்தி அதிகாரசபையின் பரிந்துரையின் பேரில் அமைச்சரினால் அனுமதியளிக்கப்பட்ட ஆதன அபிவிருத்தி செயற்திட்டத்தில் முற்றிலும் தானாக ஈடுபட பொறுப்பேற்றுக் கொண்ட வேலையினுடைய வியாபார நடவடிக்கையை தொடர்ந்து செய்தல்.

(ஆ) மறுசீரமைப்பு மற்றும் அபிவிருத்தி செயற்திட்டத்தினூடாக, சதுப்பு நிலமாக அல்லது தாழ்வாக கிடக்கின்ற ஏதாவது நிலப் பகுதிகளை சீர்படுத்தி அபிவிருத்தி செய்து ஏதாவது கைத்தொழில் கட்டிடத்திற்கு பொருத்தமானதாக அத்தகைய நிலப்பகுதிகளை மாற்றுதல்.

(இ) இலங்கை நில மறுசீரமைப்பு மற்றும் அபிவிருத்தி கூட்டுத்தாபனத்துடன் ஒப்பந்தங்களை மேற்கொள்வதினூடாக இலங்கை மறுசீரமைப்பு மற்றும் அபிவிருத்தி கூட்டுத்தாபனத்தில் வழங்கப்பட்ட ஏதாவது நிலங்களை ஏதாவது முறையில் கட்டுப்படுத்தல், கையாளுதல் மற்றும் பொறுப்பெடுத்துக் கொள்ளல்.

(ஈ) இலங்கை மறுசீரமைப்பு மற்றும் அபிவிருத்தி கூட்டுத்தாபனத்திற்கு நீர் வழங்கல், ஒளியூட்டல், கழிவு நீர் மற்றும் கழிவு நீர் அகற்றல், பொதுச்சேவை மற்றும் அது போன்ற ஒதுக்கீடுகளுக்கான நிர்மாண வேலையை தூண்டுதல், வீதி நிர்மாணங்களை தூண்டுதல் உள்ளடங்களாக கட்டணம் செலுத்துகை அல்லது வேறு வழியில், ஏதாவது வகையான சேவைகளை வழங்குவதற்கும் ஆதன அபிவிருத்திக்கும் ஏதாவது முறையிலும் வடிவத்திலும் உதவுதல்.

(உ) கடலோர அபிவிருத்தி, கடல் மறுசீரமைப்பு, நிர்மாணம் போன்ற துறைகளில் வேலைகளை மேற்கொள்ளுதலும், நங்கூரம் பாய்ச்சுமிடம், துறைமுகங்கள் போன்றவற்றை நிர்மாணித்தலும்,

(ஊ) பொறியியல் அல்லது நிர்மாண வேலைகள், கட்டிடங்கள் போன்றவற்றிற்கு தேவையான ஏதாவது மூலப் பொருட்களை உற்பத்தி செய்தல், உள்ளடங்கலாக கட்டிடங்கள், பொறியியல் மற்றும் நிர்மாண வேலைகளை செய்து முடித்தல்.

(எ) பொறியியல் துறையில் ஏதாவது ஆலோசனைப் பணிகள், ஆலோசனை வேலைகளை மேற்கொள்ளல்.

மேற்கூறப்பட்ட குறிக்கோள்களை அடைவதிலும், பிரதான தொழிற்பாடுகளை செயல்படுத்துவதிலும் மேற்கொள்ளப்பட்ட அவதானிப்புக்கள் பின்வருமாறு

(i) மேற்குறிப்பிடப்பட்ட (உ) இல் குறிப்பிடப்பட்டதை தவிர வேறு சொல்லப்பட்ட குறிக்கோள்களை அடைவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) கணக்காய்விற்காக கிடைக்கக் கூடியதாகவுள்ள தகவல்களின் பிரகாரம், முன்னைய ஆண்டு மற்றும் மீளாய்வாண்டிற்கான (தலைமை அலுவலகத்தின் மேந்தலைகள் நீங்கலாக) ஒரு பட்டறை மற்றும் தொழிற்சாலைகளினது பங்களிப்புக்கள் பின்வருமாறு.

| **தொழிற்சாலையின் பெயர்** | **பங்களிப்பு** | |
|---|---|---|
| | **2016** | **2015** |
| | **ரூபா. மில்லியன்** | **ரூபா. மில்லியன்** |
| நாவல தொழிற்சாலை - சீமெந்து கற்துண்டுகள் | (12.43) | (16.88) |
| நாவல தொழிற்சாலை - பிறிகாஸ்ட் (Pre-Cast) | 13.32 | 8.88 |
| நாவல முற்றம் - பட்டறை | (5.45) | 0.92 |
| கொட்டகல தொழிற்சாலை | (0.93) | (0.24) |
| அம்பாறை தொழிற்சாலை | (0.41) | (0.66) |
| ஹம்பாந்தோட்டை தொழிற்சாலை | (1.53) | (2.54) |
| ஹிங்குராங்கொடை தொழிற்சாலை | (0.11) | (0.10) |
| திருகோணமலை தொழிற்சாலை | 0.14 | (0.99) |

ஒரு பட்டறை மற்றும் 7 தொழிற்சாலைகளினது பங்களிப்புக்கள் தொடர்பாக பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றன.

ஒரு பட்டறை மற்றும் ஏழு தொழிற்சாலைகளில் ஐந்து தொழிற்சாலைகளினது நடவடிக்கைகளானது முன்னைய ஆண்டுக்கான எதிர்மறையான பங்களிப்பு ரூபா 21.41 மில்லியனுடன் ஒப்பிடும் போது 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான எதிர்மறையான பங்களிப்பு ரூபா 20.86 மில்லியனை விளைவித்திருந்தது. இந்த எதிர்மறையான பங்களிப்புகளுக்கு இயந்திரங்கள் மற்றும் மனித வளங்களின் இயளளவின் குறைப்பயன்பாடு பிரதான காரணமாக தாக்கமளித்திருந்தன.

## 4.2 முகாமைத்துவ பலவீனங்கள்

----------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) தாழ் உற்பத்திதிறன் மற்றும் விற்பனைகள் வருமானத்தின் குறைவு காரணமாக கம்பனியின் பட்டறையொன்றும் ஐந்து தொழிற்சாலைளும் தொடர்ச்சியாக நட்டத்தில் நடாத்தப்பட்டிருந்த போதிலும், நட்டங்களினைக் குறைக்க முகாமைத்துவத் தேவையான நடவடிக்கைளை எடுத்திருக்கவில்லை.

(ஆ) கம்பனி அதன் உற்பத்திச் செயற்பாடுகளுக்கு காலங்கடந்த தொழில்நுட்ப இயந்திரங்களினைப் பயன்படுத்திக் கொண்டிருந்த அதேவேளை, இயந்திர கோளாரான சந்தர்ப்பத்தில் பயன்படுத்துவதற்கு எவ்வித கருவிகளையோ அல்லது உபகரணங்களையோ கம்பனி கொண்டிருக்கவில்லை.

(இ) கம்பனி அதன் தொழிற்சாலை ஊழியர்களுக்கு வேலைமாற்ற வேலை நேரமொன்றினை அறிமுகப்படுத்துவதற்கு பதிலாக நிலையான வேலை நேரமொன்றினை பராமரித்திருந்தது. அதற்கமைய, கம்பனியின் தற்போதைய நிலையான வேலை நேரம் மு.ப 8.00 தொடக்கம் பி.ப 4.30 வரை காணப்பட்டது. அதன் விளைவாக, உற்பத்தித்திறன் கணிசமான அளவினால் குறைவடைந்திருந்ததுடன் சந்தையில் காணப்படும் கேள்வியினை பூர்த்தி செய்வதற்கு கூட கம்பனி தவறியிருந்தது.

## 4.3 செயற்பாட்டு பலவீனங்கள்

----------------------------------------------

நடைமுறையில் அந்தந்த ஒப்பந்தங்களினை நேரடியாக செயற்படுத்துவதற்கு ஏற்பாடுகளினை மேற்கொள்ளாது மனித மற்றும் ஏனைய வளங்களின் பற்றாக்குறை காரணமாக வெளித்தரப்பினர்களுக்கு கம்பனி அதன் நிர்மாண வேலைகளில் அதிகமானவற்றை உப ஒப்பந்தம் செய்திருந்தது. எனவே, கம்பனியினால் 3 சதவீதத்திலிருந்து 5 சதவீதம் வரையான குறைந்தளவிலான தேறிய இலாப வீச்சினை மாத்திரம் உழைக்கக்கூடியதாக காணப்பட்டது.

## 4.4 பெறுகைகள் செயற்பாடுகள்

--------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) முறையான வகையில் உத்தியோகத்தர்களுக்கிடையே கடமைப்பகிர்வின்றி, கொள்வனவு கட்டளைகளுக்கான அங்கீகாரம், விலைமனுக்களைப் பெறுதல் மற்றும் கொள்வனவுகளுக்கு செலுத்துகைகளினை மேற்கொள்ளல் போன்றன கம்பனியின் பொது முகாமையாளரினால் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

(ஆ) அரச பெறுகைகள் வழிகாட்டல்களிலுள்ள ஏற்பாடுகளுக்கு முரணாக, தொழில்நுட்ப மதிப்பாய்வு மற்றும் பெறுகைகள் ஆகிய இரண்டு குழுக்களின் உறுப்பினர்களாக கம்பனியின் கணக்காளர் மற்றும் பொறியியலாளர் நியமதிக்கப்பட்டிருந்தனர்.

**4.5 மனித வளங்கள் முகாமைத்துவம்**

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஒவ்வொரு பதவிக்கும் ஆட்சேர்ப்புத் திட்டம் மற்றும் பதவியுயர்வுகள் தயாரிக்கப்பட்டிருக்காததுடன் இரண்டிற்கும் 2003 யூன் 02 இன் பீஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 9.1.14 ஆம் பிரிவின் உறுப்புரைகளின் பிரகாரம் பணிப்பாளர் சபை மற்றும் வரிசை அமைச்சிலிருந்தும் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2014 ஆம் ஆண்டிலிருந்து விநியோக முகாமையாளர், பொறியியலாளர் போன்ற சில முக்கிய பதவிகள் வெற்றிடங்களைக் கொண்டிருந்ததுடன் 2017 யூலை 03 வரையேனும் கம்பனியினால் நிரப்பப்பட்டிருக்கவில்லை. ஆகையினால், அது கம்பனியின் சுமூகமான செயற்பாட்டினை மோசமாக பாதித்திருந்தது.

(இ) நிர்மாண வேலைகளில் ஈடுபட்டுள்ள ஊழியர்கள், அவர்களின் மீதான மேற்பார்வையின் குறைபாடுகள் காரணமாக கம்பனியினால் விதிக்கப்பட்ட சுகாதார மற்றும் பாதுகாப்பு செயல்முறையுடன் உடன்பட்டுக் காணப்படவில்லை.

**4.6 விளைவற்ற மற்றும் குறைப்பயன்பாடுடைய சொத்துக்கள்**

---

2014 இல் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 3,155,000 பெறுமதியான சீமெந்து கல்வெட்டும் இயந்திரமொன்று வெளியீடுகளில் சில குறைபாடுகள் வெளிப்படுத்தப்பட்டமையின் காரணமாக குறித்த நோக்கத்திற்கு பயன்படுத்தப்படாது நாவல தொழிற்சாலையில் தொடர்ந்து காணப்படுகின்றது.

**5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

---

**5.1 கூட்டிணைந்த திட்டம்**

---

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் திணைக்கள சுற்றறிக்கையின் பிரகாரம் கம்பனியினால் கூட்டிணைந்த திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**5.2 பெறுகைகள் திட்டம்**

---

அரச பெறுகைகள் வழிகாட்டல்களிலுள்ள வழிகாட்டல்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கு பெறுகைகள் திட்டமொன்று கம்பனியினால் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**5.3 பாதீட்டுக் கட்டுப்பாடு**

---

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.2 ஆம் பந்தியின் உறுப்புரைகளின் பிரகாரம் கம்பனியினால் வருடாந்த பாதீடொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**6. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

---

கணக்காய்வின் போது முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளில் அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் காலத்திற்கு காலம் கம்பனியின் முகாமைத்துவப் பணிப்பாளரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பில் விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

| கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் | | அவதானிப்புக்கள் |
|---|---|---|
| (அ) கணக்கீடு | i. | கம்பனியால் பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டு மென்பொருளிலுள்ள கணக்கீட்டு வடிவம், கம்பனியால் வேண்டப்பட்டவாறு மாதாந்த முகாமைத்துவ கணக்குகளின் அறிக்கையிடல் வடிவங்களுடன் ஒழுங்குபடுத்தப்பட்டிருக்கவில்லை. |
| | ii. | கம்பனியின் நிதிப் பிரிவு கணக்கீட்டு நோக்கத்திற்கு முறையான கணக்கீட்டு ஆவணங்கள் கையேடொன்றினை பராமரித்திருக்கவில்லை. |
| (ஆ) உள்ளகக் கட்டுப்பாடு | i | கம்பனியில் முறையான ஆவணப்படுத்தப்பட்ட உள்ளகக் கட்டுப்பாட்டு நடைமுறைகள் கையேடொன்று காணப்படவில்லை. |
| | ii. | உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையின் பகுதியொன்றாக உள்ளகக் கணக்காய்வு செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |